தினமணி

## ரூ.6.55 லட்சத்தில் மண்புழு உரம் தயாரிப்பு இயந்திரமயமாக்கப்படும்

First Published : 26 Feb 2010 01:55:39 AM IST

கிருஷ்ணகிரி, பிப்.25: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள பையூர் வேளாண்மைப் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்தில் ரூ.6.55 லட்சம் மதிப்பில், நபார்டு வங்கி நிதியுதவியுடன் மண்புழு உரம் தயாரிப்பு இயந்திரமயமாக்கப்பட உள்ளது என கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பி.முருகேசபூபதி கூறினார்.

பையூர் வேளாண்மை பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி மையத்துக்கு வியாழக்கிழமை வந்த அவர் மையத்தில் உள்ள மண்புழுத் திடலை பார்வையிட்டார். அப்போது அவர் கூறியது:

விவசாயிகளிடையே மண்புழு உரம் பற்றி விழிப்புணர்வு உள்ளது. கடந்த 2003-ம் ஆண்டு இந்த மையத்தில் மண்புழு உர உற்பத்தித் திடல் அமைக்கப்பட்டது. அங்கு இதுவரை 1,550-க்கும் மேற்பட்ட விவசாயிகள் மண்புழு உரம் தயாரித்தல் குறித்து பயிற்சி பெற்றுள்ளனர்.

பயிற்சிபெற்ற விவசாயிகள், மண்புழு உற்பத்திக்கு ஆள் பற்றாக்குறையை பெரும் தடையாக கருதுகின்றனர். ஒரு டன் மண்புழு உரம் தயாரிக்க குறைந்தது 8 வேலையாட்கள் தேவை.

எனவே மண்புழு உரம் தயாரிக்கும் திட்டத்தை நவீனப்படுத்தும் வகையில், நபார்டு வங்கி இதற்கு ரூ.6.55 லட்சம் நிதியுதவி வழங்க உள்ளது. மண்புழு உரத்தொட்டியை நிரப்பவும், உரத்தை சல்லடைக்குக் கொண்டு செல்லவும், சலிக்கவும் குறைந்த செலவில் இயந்திரம் வடிவமைக்கப்பட உள்ளது. அதன் மதிப்பு ரூ.50 ஆயிரம் இருக்கும்.

இதனால் தற்போது 25 டன்னாக இருக்கும் மண்புழு உர உற்பத்தி 150 டன்னாக அதிகாரிக்கும்.

இந்த இயந்திரத்தை, நபார்டு வங்கியின் அனுமதியோடு விவசாயிகளுக்கு ஏப்ரல் மாதம் முதல் விற்பனை வழங்கப்படும் என்றார் அவர்.

பதிவாளர் பி.சுப்பையன், ஆராய்ச்சி மைய இயக்குநர் எம்.பரமாத்மா, தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் என்.குமார், நபார்டு வங்கியின் உதவிப் பொதுமேலாளர் வி.திருமலை, மண்டல ஆராய்ச்சி மையத்தின் தலைவர் ஏ.கே.மணி, பேராசிரியர் எஸ்.விஜயபாஸ்கரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

## சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க அரசு மானியம்

First Published : 26 Feb 2010 03:03:55 AM IST

தேனி, பிப். 25: தேனி மாவட்டத்தில் சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க அரசு மானியம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் பி. முத்துவீரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவரது செய்திக்குறிப்பு விவரம்:

சாண எரிவாயு கலன்கள் பல்வேறு வடிவமைப்புகளில் அமைக்கலாம். தற்போது மிகச் சிறந்த அமைப்பான தீனபந்து மாடல் கலன் ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் கிராமங்களில் அமைக்கப்பட்டு வருகிறது. இதற்குப் பயனாளிகளுக்கு ரூ. 4 ஆயிரம் முதல் ரூ. 8 ஆயிரம் வரை மாடல்கல் வாரியாக மானியம் வழங்கப்படும்.

தனி நபர் கழிவறையுடன் இணைத்து சாண எரிவாயு கலன்கள் அமைக்கும் பயனாளிகளுக்கு ரூ. 1,000 மானியமும், சாண எரிவாயு கலன் மூலம் பெறும் மீத்தேன் வாயுவை டீசலுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களுக்கு பயன்படுத்தினால் ரூ. 5 ஆயிரமும் வழங்கப்படும்.

இம் மாதிரி சாண எரிவாயுக் கலன்கள் அமைக்க முகவராகப் பணியாற்றுபவர்களுக்கு 5 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் ரூ. 1,500 ஊக்கத் தொகை அனுமதிக்கப்படுகிறது. வேலையில்லாப் பட்டதாரிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இந்தப் பணிகளில் ஈடுபட்டு வருமானம் பெற வழி வகைகள் உள்ளன.

கூடுதல் விவரங்களுக்கு வட்டார வளர்ச்சி அலுவலகங்கள் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகங்களைத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார் ஆட்சியர்.

## 2.90 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது

First Published : 26 Feb 2010 07:13:26 AM IST

திருவாரூர், பிப். 25: திருவாரூர் மாவட்டத்தில் 2,90,859 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன்.

வியாழக்கிழமை நடைபெற்ற திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளித்து ஆட்சியர்:

திருவாரூர் மாவட்டத்தில் இதுவரை 1,31,320 ஹெக்டேரில் அறுவடைப் பணிகள் முடிந்துள்ளது. இதுவரை 2,90,859 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் தினசரி தேவையான அளவுக்கு பணம் வழங்கப்பட்டு, விவசாயிகளுக்கு தடையின்றி பட்டுவாடா செய்யப்படுகிறது. நெல் அறுவடை முடிந்த பிறகு இதுவரை 74,000 ஹெக்டேரில் உளுந்து, பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் 1,200 ஹெக்டேரில் எண்ணெய்ப் பனை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில் 250 ஹெக்டேருக்கு காப்பீடு பெற அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. 1,000 ஹெக்டேரில் பருத்தி சாகுபடிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், செம்மறி ஆடுகள் வளர்ப்பதை ஊக்குவிக்க அரசு மானியத்துடன் கடன் வழங்கி வருகிறது. வேளாண்மையில் உயரிய தொழில்நுட்பம், நேர்த்தியான நீர் மேலாண்மை ஆகியவைகளை கையாண்டு அதிக மகசூல் பெறப்பட்டுள்ளது. இதை மேலும் கூடுதலாக்கி வருங்காலங்களில் விவசாயிகள் கூடுதலாக உற்பத்தி செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர்.

### வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தக்காளி இறால்

First Published : 26 Feb 2010 05:43:25 AM IST



காரைக்கால், பிப். 25: காரைக்கால் கடல் பகுதியில் தற்போது அதிகமாகக் கிடைக்கும் சிறிய ரக தக்காளி இறாலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் காரைக்கால் மீனவர்கள் முனைப்பு காட்டி வருகின்றனர்.
காரைக்கால் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக தாற்காலிகமாக அரசலாற்றின் முகத்துவாரம் ஆழப்படுத்தப்பட்டதால், காரைக்கால் பகுதியைச் சேர்ந்தோரின் விசைப்படகுகள் அரசலாற்றில் நிறுத்தும் வசதி கிடைத்துள்ளது.

அதனால், உள்ளூர் மீனவர்கள் ஆழ்கடல் பகுதிக்குச் சென்று, விலையுயர்ந்த மீன், இறால்களைப் பிடித்து வருகின்றனர். இந்நிலையில், ஆழ்கடல் பகுதியில் சிவப்பு நிறம் கொண்ட வளையம் போன்ற அமைப்புடைய இறாலை "ரெட் ரிங்' இறால் எனவும், சிறிதாகவும், சிவப்பு நிறத்துடனும் உள்ளதை "தக்காளி இறால்' எனவும் மீனவர்கள் அழைக்கின்றனர்.
ஒரு நாளுக்கும் மேல் ஆழ்கடலில் தங்கி மீன் பிடிக்கும்போது, இந்த வகை இறால்கள் ஆயிரக்கணக்கில் கூட்டம் கூட்டமாக வந்து வலையில் சிக்குவதாகக் கூறப்படுகிறது.

இதில் சிறிய வகையிலான "தக்காளி இறால்' மிகுந்த சுவையுடன் உள்ளது எனறும், இவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய தனியார் ஏஜென்சிகள் கிலோ ரூ. 20 என்ற விலையில் வாங்குகிறார்கள் என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால், இவை ஓரிரு மாதங்கள் மட்டுமே கிடைக்கும் என்றனர் காரைக்கால் மீனவர்கள். துறைமுக முகத்துவாரத்திலேயே எடை போட்டு லாரிகள் மூலம் தூத்துக்குடி பகுதிக்கு இவற்றை அனுப்பி வைக்கின்றனர். துறைமுகம் கட்டும் பணி விரைவாக முடிக்கப்பட்டால் இன்னும் ஏராளமான படகுகள் காரைக்கால் துறைமுகத்துக்கு வரும். மீனவர்களுக்கும் ஏற்றுமதி, இறக்குமதியில் சிரமம் இருக்காது என்கின்றனர் உள்ளூர் மீனவர்கள்.

### மேலாண்மை முகமைத் திட்டம்: 2,520 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்

First Published : 26 Feb 2010 06:58:35 AM IST

பெரம்பலூர், பிப். 25:   பெரம்பலூர் மாவட்டத்தில், வேளாண்மை தொழிநுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் 2,520 விவசாயிகள் பயனடைந்துள்ளனர் என்றார் மாவட்ட ஆட்சியர் எம். விஜயகுமார்.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில், விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சியர் மேலும் பேசியது:

பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டையில் விதைச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க, தமிழக அரசுக்குப் பரிந்துரை கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி கிடைத்தவுடன் அப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.
தொண்டமாந்துறை, அரும்பாவூர் பகுதிகளில் அரசு மானியம் பெற்று செயல்பட்டு வரும், தனியார் சுத்திகரிப்பு நிலையங்களை அப்பகுதி விவசாயிகள் முழுமையாக பயன்படுத்தி கொள்ள வேண்டும்.
மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு, வேளாண் துறை மூலம் நடத்தப்படும் பயிற்சிக்கு விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 4 ஆண்டில் விதை பெருக்குத் திட்டத்தின் கீழ், தரமான சான்று பெற்ற நெல் விதைகள், ரூ.83 லட்சத்திற்கு கொள்முதல் செய்யப்பட்டு, 12 ஆயிரம் விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அதிக விளைச்சல் பெற 7,545 ஹெக்டேர் பரப்பளவில் செம்மை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு, இலவச நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் அரும்பாவூரில் 65 ஏக்கர் பரப்பளவில் ரூ.7 லட்சம் மதிப்பிலான யூக்கலிப்டஸ் மரக்கன்றுகளும், 20 பண்ணைக் குட்டைகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்ம) திட்டத்தின் கீழ் விவசாயிகளின் தொழில் நுட்ப அறிவினை மேம்படுத்தும் வகையில் ரூ.49.37 லட்சம் செலவிடப்பட்டுள்ளது.
இதன்மூலம் சுமார் 2,520 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.
வேளாண்மை பொறியியல் துறை மூலம் வேளாண்மையை இயந்திரமயமாக்கல் திட்டம் மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம் மூலம் 40 விவசாயிகளுக்கு பல்வேறு இயந்திரங்கள் வாங்க ரூ.81.54 லட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர் விஜயகுமார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. பழனிச்சாமி, வேளாண்மை இணை இயக்குநர் வி.ராதாகிருஷ்ணன், முன்னோடி வங்கி மேலாளர் மணிவண்ணன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கி. கண்ணதாசன் உள்ளிட்ட விவசாய சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தக்காளியில் மதிப்புக் கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிக்கப் பயிற்சி

First Published : 26 Feb 2010 07:08:56 AM IST

தஞ்சாவூர், பிப். 25: தஞ்சாவூரில் உள்ள இந்திய பயிர்ப் பதனத் தொழில்நுட்பக் கழகத்தில் மார்ச் 6-ம் தேதி தக்காளியில் இருந்து மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது குறித்த ஒருநாள் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தக்காளியில் இருந்து கெட்சப், சாஸ், சட்னி, சூப், பழக்கூழ் மற்றும் ஊறுகாய் வகைகள் போன்ற சந்தையில் நல்ல வரவேற்பு நிறைந்த பொருள்களைத் தயாரிக்க, நேரிடை செய்முறை பயிற்சி வழங்கப்படும். இப்பயிற்சிக்கான கட்டணம் ரூ. 1,000.

ஆர்வமுள்ளவர்கள் 04362-228155 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு மேலும் விவரம் பெறலாம்.

தினமலர்

## வால்பாறையில் வறட்சியால் தேயிலை உற்பத்தி பாதிப்பு! செடி கருகுவதால் தொழிலாளர் கவலை

வால்பாறை : வால்பாறையில் நிலவிவரும் கடும் வறட்சியால் பசுமையாக காணப்பட்ட தேயிலை செடிகள் ஆங்காங்கே கருகி காணப்படுகிறது. இதனால், உற்பத்தி பாதிப்படைந்து, தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வால்பாறை மலைப்பகுதியில் 50 க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளது. இதில், 80 சதவீதம் தேயிலை மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. மீதம் காபி, ஏலம், மிளகு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன.ஒட்டு மொத்த வால்பாறைப்பகுதியே தேயிலை எஸ்டேட்டுகளை நம்பியே உள்ளது.
இந்நிலையில், வால்பாறையில் கடந்த ஆண்டு தென் மேற்குப்பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்தாலும், வட கிழக்குப்பருவ மழை விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. இதனால், வால்பாறையில் இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்தே கடும் வறட்சி நிலவியதால் எஸ்டேட்டின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேயிலை செடிகளுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ளது.பெரும்பாலான எஸ்டேட்டுகளில் தேயிலைக்கு தண்ணீர் பாய்ச்சி அடிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வால்பாறையில் கடும் வறட்சி நிலவுவதால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்காலிக தேயிலை தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர். கடும் பனி : பகலில் சுட்டெரிக்கும் வெயிலால் தேயிலை செடிகள் கருகி வரும் நிலையில், அதிகாலையில் கடும் பனிப்பொழிவினால், சில எஸ்டேட்டுகளில் தேயிலை செடிகள் உறைபனியால் கருகியுள்ளன. எதிர்பாராத காலநிலை மாற்றத்தால் தேயிலை செடிகள் பல்வேறு நோய்கள் தாக்கப்பட்டுள்ளன.

சின்கோனா உபாசி தேயிலை ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது:வால்பாறையில் நிலவிவரும் தட்பவெட்ப நிலை மாற்றத்தால் தேயிலைக்கு போதிய அளவு தண்ணீர் இல்லை. தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், தேயிலைக்கு சிகப்பு சிலந்தி பூச்சி நோய் பரவலாக பரவியுள்ளது. இதை தடுக்கும் வகையில் "ஸ்பைர்டமட், லைன்சப்லர்' போன்ற மருந்துகள் தெளிக்கப்படுகின்றனஎன்றனர்.

## விவசாய நிலங்களில் மண் எடுப்பு: குறைதீர் கூட்டத்தில் புகார்

கிருஷ்ணகிரி: விவசாயிகள் குறைதீர் கூட்டம் கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடந்தது. கலெக்டர் சண்முகம் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., பிரபாகர், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நடந்த விவாதம்: கோபால்ரெட்டி: விவசாய தேவைக்காக ஆறு மணி நேரம் வழங்கப்படும் மும்முனை மின்சாரம் தற்போது, அடிக்கடி தடைபடுகிறது. மின் வாரிய செயற்பொறியாளர் மயில்சாமி: மின் உற்பத்தி நிலையங்களில் ஏற்படும் கோளாறு காரணமாக தலைமை அலுவலகத்தில் இருந்து வரும் உத்தரவுபடி மின்சாரம் நிறுத்தம் செய்யப்படுகிறது. குறைந்த மின் அழுத்தத்தை தவிர்க்க பல இடங்களில் டிரான்ஸ்ஃபார்மர் அமைக்கப்பட்டு வருகிறது. கோடை காலத்தில் இது போன்று அடிக்கடி நடக்க வாய்ப்புள்ளது.

ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி அடுத்த ஆம்பள்ளி மற்றும் குட்டூர் பகுதியில் சட்ட விரோதமாக பட்டா நிலங்களில் இருந்து மணல் எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. அந்த பகுதியில் உள்ள விவசாய கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது. மாவட்ட நிர்வாகம் மணல் எடுப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். கலெக்டர் சண்முகம்: இது

குறித்து டி.ஆர்.ஓ., மற்றும் கனிம வளத்துறை அதிகாரிகள் கொண்ட குழுவினர் சம்பவ இடத்தை ஆய்வு செய்வார்கள். ஆய்வுக்கு பின் அந்த பகுதியல் மணல் எடுப்பதை அனுமதிப்பதா? அல்லது தடுத்து நிறுத்துவதா? என முடிவு செய்யப்படும்.

லோகாபிராம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலர் சாகுபடி மற்றும் மல்பரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின் இணைப்பு வழங்கப்படுவதாக தகவல் வந்தது. மயில்சாமி: மலர் சாகுபடி மற்றும் மல்பரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மின் கட்டணத்தில் மட்டும் சலுகை வழங்கப்படுகிறது. மின் இணைப்பு பெறுவதில் நிலுவையில் உள்ள மனுக்களின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்படும். ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது கால்நடைகளை மர்ம காய்சல் தாக்கி வருகிறது. மாவட்டத்தில் 20 கிலோ மீட்டருக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அல்லது கால்நடை மருந்தகங்கள் உள்ளதால் நோய் தாக்கிய கால்நடைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியவில்லை. மேலும் பல இடங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்க வேண்டும். கலெக்டர் சண்முகம்: "மாவட்டத்தில் 5,000 கால்நடைகள் உள்ள இடத்தில் ஒரு கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும்' என அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் படிப்படியாக மாவட்டத்தில் அதிகம் கால்நடை வளர்க்கும் இடங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்படும். தர்மன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது மாவில் பூக்கள் பூத்துள்ளது. நல்ல காய்கள் விட மாவில் தெளிக்க வேண்டிய மருந்துகள் எது என்பது குறித்து தோட்டக்கலை துறை விவசாயிகளுக்கு விளக்க வேண்டும். மேலும், மருந்துகளை மா விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும். கலெக்டர் சண்முகம்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 1984ம் ஆண்டு முதல் 89ம் ஆண்டு வரை மா விவசாயிகளுக்கு மானிய விலையில் மருந்துகள் வழங்கப்பட்டு வந்தன. இதன் பிறகு இந்த திட்டம் நிறுத்தப்பட்டது. மானிய விலையில் மா விவசாயிகளுக்கு மருந்துகள் வழங்க அரசுக்கு பரிந்துரைக்கப்படும். தாசப்பா: தேன்கனிக்கோட்டை உழவர்கள் சந்தையில் அடிப்படை வசதிகள் இல்லாததால் அங்கு வரும் விவசாயிகள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

கலெக்டர் சண்முகம்: தேன்கனிக்கோட்டை உழவர் சந்தையில் உடனடியாக போர்வெல் அமைத்து குடிநீருக்கு ஏற்பாடு செய்யப்படும். மேலும், உழவர் சந்தையில் தற்போதுள்ள கடைகளை தவிர அதிக கடைகள் அமைக்கப்படும்.இவ்வாறு விவாதம் நடந்தது.

### தேனீ வளர்ப்பு பயிற்சி

மதுரை:மதுரை கொட்டாம் பட்டி ஊராட்சி அலுவலகத்தில், விவசாயிகளுக்கு தேனீ, பட்டுப்பூச்சி வளர்ப்பு பயிற்சி அளிக்கப் பட்டது. ஊராட்சித் தலைவர் திலகராஜ் முன்னிலை வகித்தார்.மதுரை வேளாண் இணை இயக்குனர் சங்கரலிங்கம் தலைமை வகித்தார். வேளாண் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, தோட்டத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, விதைச்சான்றுத் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு பேசினர். கொட்டாம்பட்டி வேளாண் உதவி இயக்குனர் செல்வபாண்டி, வேளாண் அலுவலர் ரவி, துணை வேளாண் அலுவலர் ஆதிஸ்வரன் மற்றும் உதவி வேளாண் அலுவலர்கள் ஏற்பாடுகளைச் செய்தனர்.

## விளாச்சேரியில் கருகும் நெற்பயிர் பாதுகாக்க ஊராட்சி நடவடிக்கை

திருப்பரங்குன்றம்:விளாச்சேரி பகுதியில் கருகும் நெல் பயிர்களை காக்க, கண்மாய் தண்ணீர் கொண்டுசெல்ல ஊராட்சி சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.வைகை அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீர் விளாச்சேரி கண்மாய்க்கு வருகிறது. இக்கண்மாய் தண்ணீர் மூலம் 600 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இந்த ஆண்டு பருவமழை பொய்த்துவிட்டதால், அணையிலிருந்து மிக குறைந்த அளவு தண்ணீரே திறக்கப்பட்டது. விளாச்சேரி கண்மாய் முழுமையாக நிரம்பவில்லை. மீண்டும் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் அப்பகுதியில் நெல் சாகுபடி செய்யப்பட்டது.

இரண்டு முதல் ஐந்துமுறை தண்ணீர் கொடுத்தால், அறுவடை செய்து லாபம் அடையும் நிலை ஏற்பட்ட நிலையில் கண்மாயில் தண்ணீர் வற்றி விட்டது. சிலர் அருகிலுள்ள கிணறுகளிலிருந்து தண்ணீரை விலைக்கு வாங்கினர். பல நூறு ஏக்கர் நிலங்களில் பயிர் கருகியது. நான்குவழிச்சாலைக்காக விளாச்சேரி கண்மாயின் மேற்கு பகுதியில் மணல் அள்ளப்பட்ட பள்ளங்களில் தண்ணீர் உள்ளது. அந்த தண்ணீரை விவசாயத்திற்கு பயன்படுத்த உதவுமாறு, ஊராட்சி தலைவர் மரகதவல்லியிடம் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர். கண்மாய் பள்ளங்களிலிருந்து கிழக்கு பகுதியில் தண்ணீர் வெளியேறும் மூன்று மடைகள் வரை மணல் அள்ளும் இயந்திரம் மூலம் கால்வாய் அமைத்து, கண்மாய் தண்ணீரை விவசாயத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதற்கான பணி நேற்று துவங்கியது.விவசாய பாசன சங்க பொருளாளர் கருத்தசாமி கூறுகையில், ""மணல் அள்ளப்பட்ட பகுதியில் நல்ல ஆழம் உள்ளது. ஊராட்சியின் நடவடிக்கையால் பயிர்களை காப்பாற்ற முடியும். கண்மாய் மேடாகவும், அதன் அருகே திருப்பரங் குன்றம் கண்மாய்களுக்கு தண்ணீர் செல்லும் கால்வாய் பள்ளமாகவும் இருக்கிறது. இதனால் விளாச்சேரி கண்மாயில் நிறைந்த நீர், பூமிக்கடியில் கசிந்து கல்வாய்க்கு செல்கிறது. கண்மாயை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்போதுதான் அடுத்த ஆண்டு விவசாயம் செய்ய முடியும்,'' என்றார்.

## விவசாயிகளுக்கு எதிராக புதிய சட்டம்: வேளாண் விஞ்ஞானி எச்சரிக்கை

மேட்டூர்: "" மரபணு மாற்ற விதை குறித்து பேசுபவர்கள், பிரச்சாரம் செய்வோர் மீது உயிரி தொழில்நுட்பம் ஒழுங்கு முறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து சிறை தண்டனை விதிக்கவும் வாய்ப்புள்ளது,'' என, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் கூறினார். இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் நேற்று மேட்டூர் புதுசின்னகாவூர், கோல்நாயக்கன்பட்டி கிராமத்தில் விவசாயிகளிடம் இயற்கை விவசாயத்தால் ஏற்படும் நன்மை குறித்து விளக்கம் அளித்தார்.

பின்னர் அவர் கூறியதாவது: மத்திய அரசு உயிரியல் தொழில்நுட்ப துறை சார்பில் புதிதாக ஒரு சட்டத்தை நிறைவேற்றுவதற்கான முன்மொழிவை பார்லிமென்டில் தாக்கல் செய்ய திட்டமிட்டுள்ளது. இந்த சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறினால், மரபணு மாற்ற விதை குறித்து பேசுபவர்கள், பிரச்சாரம் செய்வோர் மீது உயிரி தொழில்நுட்பம் ஒழுங்கு முறை சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து சிறை தண்டனை விதிக்கவும் வாய்ப்புள்ளது.

இந்திய அரசியல் சட்டத்தில் விவசாயம் என்பது மாநில பட்டியலில் உள்ளது. எனவே, அரசியல் சாசனத்திற்கு எதிரான இந்த சட்டத்தை எதிர்த்து மாநில விவசாயிகள் நீதிமன்றம் போய் விடக்கூடாது என்பதற்காக, அதை எதிர்த்து நீதிமன்றம் போவதற்கும் தடை விதித்து சட்டம் இயற்ற திட்டமிட்டுள்ளது. இந்த சட்டம் நிறைவேறினால், மரபணு மாற்று பயிர்களை பாதுகாக்க வெளிநாட்டு நிறுவனங்கள் சார்பிலோ அல்லது அரசு சார்பிலோ விதை

இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு நியமிக்கப்படும் விதை இன்ஸ்பெக்டர்கள் காலம் காலமாக இந்திய விவசாயிகள் பயன்படுத்தும் பாரம்பரிய ரக விதைகளை வைத்திருக்க உரிமை இல்லை என கூறி அவற்றை பறிமுதல் செய்து, விதை வைத்திருக்கும் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு உள்ளது.

அதனால், நாட்டின் பாரம்பரிய விதைகள் முற்றிலும் அழிக்கப்பட்டு, மரபணு மாற்று விதையை மட்டுமே சாகுபடி செய்யும் சூழல் ஏற்படும். விதைக்காக வெளிநாட்டு கம்பெனியை எதிர்பார்த்து விவசாயிகள் காத்திருக்க வேண்டிய நிலை உருவாகும். மரபணு மாற்ற விதை தொடர்பான சட்டத்தை அரசு நிறைவேற்றினால், அதை இரண்டாவது சுதந்திர போராட்டமாக கருதி, மரபணு மாற்று விதையை எதிர்த்து அகிம்சை வழியில் எங்கள் போராட்டம் தொடரும்.இவ்வாறு அவர் கூறினார்.

### விதை கிராம திட்டத்தில் விவசாயிக்கு பயிற்சி முகாம்

இடைப்பாடி: இடைப்பாடி அருகே வெள்ளார் நாயக்கன் பாளையத்தில் விவசாயிகளுக்கு விதை கிராமத்திட்டத்தில் எண்ணெய் வித்துக்கள் பயிற்சி முகாம் நேற்று நடந்தது. இடைப்பாடி தாலூகா வெள்ளார் நாயக்கன்பாளையத்தில் வேளாண்மைத்துறை மூலம் விதைகிராமத் திட்டத்தில் விவசாயிகளுக்கு இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் நடந்தது.

இடைப்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் தங்கராஜ் தலைமை வகித்தார். பயிற்சியில் விதைச்சான்று அலுவலர் சுமதி பேசும்போது, ""எண்ணெய் வித்துக்களில் தரமான விதை உற்பத்தி செய்யும் முறை மற்றும் கலப்பின ரகங்களை எவ்வாறு அகற்றுவது, பூச்சி ஏற்படும் நோய் வராமல் பாதுகாப்பது பற்றியும்," விவசாயிகளிடம் கூறினார். வேளாண்மைத்துறை துணை அலுவலர் பச்சமுத்து, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமு, செல்வன், கோவிந்தராஜ், ரமேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். முகாமில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

### இலவச கால்நடை மருத்துவ முகாம்

திருவள்ளூர் :இலவச கால்நடை மருத்துவ முகாம் சேவாலயா பள்ளியில் நடந்தது. முகாமில், பசு, காளை, ஆடு,கோழி, நாய் உட்பட பலவற்றிற்கும் இலவச சிகிச்சை அளிக்கப் பட்டது.திருவள்ளூர் அடுத்த திருநின்றவூர் அருகே கசுவா கிராமத்தில் சேவாலயா பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியில் ஆண்டுதோறும் இலவச கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது.

அதேபோல், இவ்வாண்டுக்கான முகாம் நேற்று அங்கு நடந்தது.வறண்ட பசுக்களுக்கான வினோபாஜி கோசாலா மூலம் கிராமத்தினர் பயன் பெறும் வகையில், இச்சிறப்பு முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.முகாமில், கசுவா, ராமநாதபுரம், பாக்கம், புலியூர், கலியனூர், கண்டிகை, பண்டிக்காவனூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 95 ஆடுகள், எருது மற்றும் காளை என 45, பசுக்கள்-72, கோழி-5, எருமை மாடு-42 மற்றும் ஒரே ஒரு நாய்க்குட்டி என 250 கால்நடை கள் கொண்டு வரப்பட்டு அவற்றிற்கு உரிய மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.முகாமில், கால்நடை மருத்துவர்கள் கருணாநிதி மற்றும் பிரேமா ஆகியோரும், ஆய்வாளர் மோகன் மற்றும் உதவியாளர் அரிபாபு ஆகியோர் கொண்ட மருத்துவக் குழுவினர் கால்நடைகளை பரிசோதித்து சிகிச்சை அளித்தனர்.கால்நடைகள் கருவுறுதலுக்கான ஊசி, வைட்டமின் ஊசி ஆகியவை போடப் பட்டு, கால்நடைகளை தாக்கும் பூச்சிகளை அழிக்கும் மருந்து மற்றும் சத்துணவு மருந்துகளும் வழங்கப்பட்டது. முகாமை பள்ளி தலைமை ஆசிரியர் சிட்டிபாபு துவக்கி வைத்தார்.முகாம் காரணமாக அப்பகுதியில்

கால்நடைகளை வளர்த்து வரும் கிராமத் தினருக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. முடிவில், செல்வம் நன்றி கூறினார்.

### புவி வெப்பமயமாதலை தடுக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்: கலெக்டர் வேண்டுகோள்

அரக்கோணம்: புவி வெப்ப மயமாதலை தடுக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமென கலெக்டர் ராஜேந்திரன் கேட்டுக்கொண்டார். அரக்கோணம் சிஎஸ்ஐ சென்ட்ரல் மேல்நிலைப்பள்ளியில், எக்ஸ்னோரா, ரோட்டரி இணைந்து அழகிய அரக்கோணம் திட்ட துவக்க விழா நடந்தது. ரோட்டரி கவர்னர் சம்பத்குமார் தலைமை வகித்தார். எக்ஸ்னோரா நிறுவனர் நிர்மல், எக்ஸ்னோரா இன்டர்நேஷனல் தலைவர் சுலோச்சனா ராமசேஷன் முன்னிலை வகித்தார். அரக்கோணம் ரோட்டரி கிளப் தலைவர் ராஜேசேகரன் வரவேற்றார்.

இதில் கலெக்டர் ராஜேந்திரன் பேசியதாவது: புவி வெப்ப மயமாதலை தடுக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும். வீட் டு க்கு வீடு மரங்கள் நட வேண் டும். எக்ஸ்னோராவுக்கு வே ண்டிய உதவிகளை மாவட்ட நிர்வாகம் செய்யும். இவ்வாறு அவர் பேசினார்.பின்னர், மின்சிக்கனத்தை வலியுறுத்தும் வகையில் சோலார் விளக்கை கலெக்டர் அறிமுகப்படுத்தினார். விழாவில், சிஐஎஸ்எப் டிஐஜி செல்லதுரை, அரக்கோணம் எக்ஸ்னோரா தலைவர் சாந்தி, ரோட்டரி நிர்வாகிகள் செல்வம், மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

"பறந்த' கலெக்டர்: அரக்கோணம் அரசு மருத்துவமனையில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டடத்தை விரைவில் திறக்கவும், அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி, ஒரு தடவை மருத்துவமனையை வந்து விசிட் செய்யுங்கள் என கலெக்டரிடம், சமூக அமைப்புகளை சேர்ந்த நிர்வாகிகள் தேவஆசிர்வாதம், வேலு, ஸ்டீபன்சன்குமார் மற்றும் பலர் கேட்டனர். முதலில், அப்புறம் வந்து பார்க்கிறேன் என்ற கலெக்டரிடம், தொடர்ந்து அவர்கள் வலியுறுத்த, வாங்கள் வருகிறேன் என கூறி விட்டு காரில் வேலூர் நோக்கி "பறந்தார்'. இது சமூக அமைப்பினரிடையே மன வேதனையை ஏற்படுத்தியது.

### நீர், வேலையாள் பற்றாக்குறையால் குறைந்துவரும் சாகுபடி :பறிக்க ஆளின்றி செடிகளிலேயே தொங்கும் மிளகாய் ,பிப்ரவரி 26,2010,00:00 IST



வத்திராயிருப்பு: வேலையாட்கள் பற்றாக்குறையாலும், வறட்சியாலும் மிளகாய் விவசாயம் படிப்படியாக வீழ்ச்சியடைந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் அதன் சாகுபடி பாதியாக குறைந்து வருகிறது. தற்போது பயிரிடப்

பட்டுள்ள மிளகாய் செடிகளை பறிப்பதற்கு வேலையாட்கள் கிடைக்காததால் மிளகாய் பழங்கள் பல இடங்களில் செடிகளிலேயே தொங்கிக் கொண்டிருக்கின்றன. விருதுநகர் மாவட்டத்தில் புஞ்சை நிலப்பகுதிகளில் மிளகாய் விவசாயம் பெருமளவு நடந்து வந்தது. ராஜபாளையம், ஸ்ரீவி., வத்திராயிருப்பு, விருதுநகர், அருப்புக்கோட்டை, சுந்தரபாண்டியம், குன்னூர் பகுதிகளில் அமோக விளைச்சல் உண்டு. சீசன் நேரங்களில் மதுரை, விருதுநகர், கோவில்பட்டி, சங்கரன்கோவில் பகுதிகளிலிருந்து கமிஷன் கடைக்காரர்கள் விவசாயம் நடைபெறும் இடங்களுக்கே வந்து போட்டி போட்டுக்கொண்டு மகசூலை கொண்டு செல்வார்கள். ஒருசில வியாபாரிகள் பயிரிடும்போதே அட்வான்ஸ் தொகை கொடுத்து மகசூலுக்கு "புக்கிங்' செய்துவிடுவார்கள். மேலும் உழவு, நடவு போன்ற விவசாய செலவுகளுக்கும் பணம் கொடுத்து செல்வார்கள். அவ்வளவு அமோகமாக நடந்து கொண்டிருந்த விவசாயம் வறட்சியால் போதிய நீரில்லாமலும், வேலையாட்கள் பற்றாக்குறையாலும் ஒவ்வொரு ஆண்டும் படிப்படியாக குறைந்துவருகிறது.பராமரிப்பு: மிளகாய் செடிகளை பொருத்தவரை நெற்பயிரைப்போன்றே நீரும், பராமரிப்பும் அதிகமாக தேவைப்படும். நாற்றுப்பாவியதிலிருந்து நூறு நாட்களுக்கு பிறகே காய் காய்கத் தொடங்கும். அதுவரை அதன் அருகிலேயே இருந்து பெற்ற பிள்ளையை காப்பதுபோல் காக்க வேண்டும்.

அதன்பிறகு நான்கு நிலைகளாக காய்கள் காய்க்கும். ஒவ்வொரு நிலையிலும் வரும் காய்களை ஒவ்வொரு நிலையில் பதப்படுத்தி காயவைக்க வேண்டும்.

முதல்நிலையில் வரும் காய்கள் அதிக எடையில் பழங்கள் பெரியதாக இருக்கும், இரண்டாவது அதற்கு அடுத்தபடியாகவும், மூன்று மற்றும் நான்காம் நிலையில் உள்ள காய்கள் விதை அதிகமாகவும், எடை குறைவாகவும் இருக்கும். இவைகளை அடுத்த சாகுபடிக்கு விதைக்காக பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதற்குள் மூன்று முறை மருந்து அடித்தல், நான்குமுறை களையெடுத்தல், மகசூல் காலங்களில் 2 நாட்களுக்கு ஒருமுறை காய்பறித்தல் என அதிகளவில் மனித உழைப்பும், பராமரிப்பும் தேவைப்படுகிறது. பறிக்க ஆளில்லை: தற்போது விவசாயத்தில் தொழிலாளர்கள் பற்றாக்குறை அதிகளவில் உள்ளது. மிளகாய் பயிரிட்டு மகசூல் எடுப்பதற்குள் ஒவ்வொரு விவசாயிகளும் மிகுந்த சிரமத்திற்குள்ளாகிவிடுகின்றனர். இதனால் ஏராளமான விவசாயிகள் மிளகாய் பயிரிடுவதை படிப்படியாக நிறுத்தி விட்டனர். பயிரிட விரும்பும் ஒருசில விவசாயிகளும் வறட்சியால் பயிரிடமுடியாமல் போகிறது. இதனால் மாவட்டத்தில் மிளகாய் விவசாயம் சரிபாதியாக குறைந்து விட் டது. வத்திராயிருப்பு பகுதியில் பயிரிட்ட பல இடங்களில் மிள காய் பழங்களை பறிக்க ஆளின்றி செடிகளிலேயே தொங்கிக் கொண் டிருக்கின்றன. மிளகாய் பறிப்பதற்கு ஒரு நபருக்கு கூலியாக 50 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் அரசு வழங்கும் வேலை உறுதியளிப்பு திட்டத்தில் இதைவிட குறைந்த உழைப்பும், அதிக கூலியும் தரப்படுவதால் தொழிலாளர்கள் அங்கு சென்று விடுகின்றனர். அங்கு வேலையில்லாத நாட்களில் மட்டுமே விவசாய வேலைகளுக்கு வருகின்றனர். இதுகுறிந்து வலையன்குளம் கோட்டைப்பட்டியை சேர்ந்த விவசாயி சங்கரலிங்கம் கூறுகையில், "ஆள் கிடைக்காமல் மனைவி, பிள்ளைகள் என குடும்பத்துடன் சென்று நாங்களாகவே பறித்து வருகிறோம். நீர் பற்றாக்குறையால் நான்கு ஏக்கர் பயிரிடவேண்டிய இடத்தில் தற்போது ஒரு ஏக்கர் மட்டுமே பயிரிட்டுள்ளேன்' என்றார்.

**வால்பாறையில் வறட்சியால் தேயிலை உற்பத்தி பாதிப்பு! : செடி கருகுவதால் தொழிலாளர் கவலை**

பிப்ரவரி 26,2010,00:00 IST



வால்பாறை: வால்பாறையில் நிலவிவரும் கடும் வறட்சியால் பசுமையாக காணப்பட்ட தேயிலை செடிகள் ஆங்காங்கே கருகி காணப்படுகிறது. இதனால், உற்பத்தி பாதிப்படைந்து, தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வால்பாறை மலைப்பகுதியில் 50 க்கும் மேற்பட்ட தேயிலை எஸ்டேட்டுகள் உள்ளது. இதில், 80 சதவீதம் தேயிலை மட்டுமே பயிரிடப்பட்டுள்ளது. மீதம் காபி, ஏலம், மிளகு போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டுள்ளன. ஒட்டு மொத்த வால்பாறைப்பகுதியே தேயிலை எஸ்டேட்டுகளை நம்பியே உள்ளது. இந்நிலையில், வால்பாறையில் கடந்த ஆண்டு தென் மேற்குப்பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்தாலும், வட கிழக்குப்பருவ மழை விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை கொடுத்தது. இதனால், வால்பாறையில் இந்த ஆண்டின் துவக்கத்திலிருந்தே கடும் வறட்சி நிலவியதால் எஸ்டேட்டின் பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தேயிலை செடிகளுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் கருகும் நிலையில் உள்ளது. பெரும்பாலான எஸ்டேட்டுகளில் தேயிலைக்கு தண்ணீர் பாய்ச்சி அடிக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். வால்பாறையில் கடும் வறட்சி நிலவுவதால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் தற்காலிக தேயிலை தொழிலாளர்கள் வேலை இல்லாமல் அவதிப்படுகின்றனர். கடும் பனி : பகலில் சுட்டெரிக்கும் வெயிலால் தேயிலை செடிகள் கருகி வரும் நிலையில், அதிகாலையில் கடும் பனிப்பொழிவினால், சில எஸ்டேட்டுகளில் தேயிலை செடிகள் உறைபனியால் கருகியுள்ளன.

எதிர்பாராத காலநிலை மாற்றத்தால் தேயிலை செடிகள் பல்வேறு நோய்கள் தாக்கப்பட்டுள்ளன.

சின்கோனா உபாசி தேயிலை ஆராய்ச்சியாளர்கள் கூறியதாவது: வால்பாறையில் நிலவிவரும் தட்பவெட்ப நிலை மாற்றத்தால் தேயிலைக்கு போதிய அளவு தண்ணீர் இல்லை. தேயிலை உற்பத்தி குறைந்துள்ளது. மேலும், தேயிலைக்கு சிகப்பு சிலந்தி பூச்சி நோய் பரவலாக பரவியுள்ளது. இதை தடுக்கும் வகையில் "ஸ்பைர்டமட், லைன்சப்லர்' போன்ற மருந்துகள் தெளிக்கப்படுகின்றன என்றனர்.

## *சித்தூர் தாலுகாவில் தர்ப்பூசணி வியாபாரம் அமோகம்*

*கொழிஞ்சாம்பாறை,*

*பிப்.26–*

*கேரளாவில் தற்போது வெயில் சுட்டெரித்து வருகிறது. பாலக்காடு மாவட்டத்தில் வழக்கத்திற்கு மாறாக இந்த ஆண்டு கோடை காலம் இப்போதே தொடங்கி விட்டது. வெயில் சுட்டெரிப்பதால் ரோடுகளில் நடமாடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது.*

*சித்தூர் பகுதியில் வெயில் கொளுத்துவதால் கட்டுமான பணியில் ஈடுபட்டு உள்ள தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டு உள்ளனர். வெயில் கொளுத்துவதால் இருசக்கர வாகன ஓட்டிகள் பெரும்பாலானோர் பஸ்சில் சென்று வருகின்றனர்.*

*வெயில் கொடுமையை தணிக்க பாலக்காடு மாவட்டத்தில் ரோட்டோரம் ஆங்காங்கே தர்ப்பூசணி கடைகள் முளைத்து இருக்கின்றன. மேலும் குளிர்பான கடைகளும் ரோட்டோரத்தில் நிறைய காணப்படுகிறது. இருசக்கர வாகனத்தில் செல்வோர் தர்ப்பூசணி, சர்பத் போன்றவற்றை சாப்பிட்டு விட்டு தங்கள் பயணத்தை தொடர்கிறார்கள். சித்தூர், கொழிஞ்சாம்பாறை பகுதியில் ஒரு தர்ப்பூசணி 5 ரூபாய்க்கும், சர்பத் 8 ரூபாய்க்கும், சோடா சர்பத் 10 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.*

*மாணவ–மாணவிகளும், பொதுமக்களும் கோடை வெயிலை தணிக்க தர்ப்பூசணி பழத்தை ருசி பார்க்கிறார்கள்.*

## *'தமிழகத்துக்கு கூடுதல் அரிசி ஒதுக்க வேண்டும்' பாராளுமன்றத்தில் டி.ஆர்.பாலு பேச்சு*

*புதுடெல்லி, பிப்.26–*

*தமிழ்நாட்டுக்கு கூடுதல் அரிசியை மத்திய அரசு ஒதுக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் டி.ஆர்.பாலு கோரிக்கை விடுத்தார்.*

*பாராளுமன்றத்தில் விவாதம்*

*நாடு முழுவதும் அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்ந்து வருவது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று விவாதம் நடந்தது. அந்த விவாதத்தில், தி.மு.க. சார்பாக அந்த கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் டி.ஆர்.பாலு பங்கேற்று பேசினார்.*

*அப்போது அவர் கூறியதாவது:–*

*கருணாநிதி அவசர கூட்டம்*

*விலைவாசி உயர்வுக்கு மத்திய அரசை மட்டுமே எதிர்க்கட்சிகள் குறை கூறக்கூடாது. தாங்கள் ஆளும் மாநிலங்களின் செயல்பாடுகளையும் திரும்பி பார்க்க வேண்டும். கடந்த 1971–ம் ஆண்டில் இருந்ததை விட இரண்டு மடங்கு மக்கள் தொகை அதிகரித்துள்ளது. அதற்கு இணையாக விவசாய நிலங்கள் அதிகரிக்கவில்லை. எனவே, போதுமான விவசாய உற்பத்தி இல்லை.*

*உதாரணமாக, 2011–12–ம் நிதி ஆண்டில் கூடுதலாக 9 சதவீத பருப்பு வகைகள் தேவைப்படுகிறது. ஆனால், 6 சதவீதம் மட்டுமே உற்பத்தி அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பருவநிலை மாற்றம், பனி சிகரங்கள் உருகுதல் போன்றவற்றாலும் வறட்சி நிலவுகிறது.*

*உயர்ந்து வரும் விலைவாசியை கருத்தில் கொண்டே, ஒரு அவசர பொதுக்குழு கூட்டத்தை எங்கள் கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான கருணாநிதி, கடந்த 20–ந் தேதி கூட்டினார். அந்த கூட்டத்தில், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்துவதற்காக அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தில் தேவையான திருத்தங்களை மத்திய, மாநில*

அரசுகள் செய்ய வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூடுதல் அரிசி தேவை

மேலும், வறுமைக்கோட்டுக்கு கீழே உள்ளவர்கள், மேலே உள்ளவர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் கிலோவுக்கு ஒரு ரூபாய் வீதத்தில் அரிசி வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் ஒரு கோடியே 98 லட்சம் குடும்பத்தினர் பலனடைகின்றனர். அதனால், மாதந்தோறும் 3 லட்சத்து 16 ஆயிரம் டன் அரிசி தேவைப்படுகிறது. ஆனால், 2 லட்சத்து 98 ஆயிரம் டன் அரிசி மட்டுமே மத்திய அரசு வழங்குகிறது.

பற்றாக்குறையாக உள்ள 18 ஆயிரம் டன் அரிசியை கிலோவுக்கு ரூ.15 வீதம் மத்திய அரசிடம் இருந்து வாங்கி ரூ.1 வீதத்தில் மக்களுக்கு வழங்குகிறோம். எனவே, கூடுதலாக தமிழகத்துக்கு அரிசி ஒதுக்குமாறு மத்திய விவசாய மந்திரி சரத்பவாரை கேட்டுக்கொள்கிறேன். சர்க்கரை தட்டுப்பாட்டை தவிர்க்க 'லெவி'யாக பெறும் சர்க்கரை அளவை 10 சதவீதத்தில் இருந்து 20 சதவீதமாக உயர்த்தலாம்.

நாடு முழுவதும் பரவலாக்க கோரிக்கை

தமிழ்நாட்டில் சர்க்கரை ரூ.13.30–க்கும், கோதுமை ரூ.7.50–க்கும் வழங்கப்படுகிறது. விலைவாசியால் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக துவரம்பருப்பு ரூ.40–க்கும், உளுந்தம் பருப்பு ரூ.40–க்கும், பாமாயில் லிட்டருக்கு ரூ.30 வீதத்திலும் பொது வினியோக திட்டத்தில் வழங்கப்படுகின்றன. ரவை, மைதா, ஆட்டா போன்றவையும் வினியோகிக்கப்படுகின்றன.

சென்னைக்கும், டெல்லிக்கும் இடையே மிக அதிக அளவில் விலை வேறுபாடு உள்ளது. எனவே, தமிழகத்தை போலவே நாடு முழுவதும் பொது வினியோக திட்டத்தை பரவலாக்க வேண்டும். தி.மு.க. தலைவர் கருணாநிதியால் வழிநடத்தப்படும் மத்திய அரசு, முறையான அறிவுரையை ஏற்று செயல்படும் என்று நம்புகிறேன்.

இவ்வாறு டி.ஆர்.பாலு பேசினார்.

## 2009–10–ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கை பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்திட விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டுக்கான பொருளாதார ஆய்வு அறிக்கையை மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி வியாழக்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார். அதில், பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்திட, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சி

மத்திய அரசு வழங்கிய ஊக்குவிப்பு சலுகைகளால், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மீண்டும் முன்னேற்ற பாதைக்கு திரும்பி வருகிறது. 2011–12–ஆம் நிதி ஆண்டில் இந்த வளர்ச்சி மீண்டும் 9 சதவீதத்தை தாண்டிவிடும் என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதி ஆண்டில் இது 7.2 சதவீதமாக இருக்கும் என்றும், வரும் 2010–11–ஆம் நிதி ஆண்டில் 8.75 சதவீதமாக உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த நான்கு ஆண்டுகளில், பொருளாதார வளர்ச்சி வேகத்தில் இந்தியா உலக அளவில் முதலிடத்தை பிடிக்கும் என்றும் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சென்ற 2009–ஆம் ஆண்டில் நாட்டின் பங்கு வர்த்தகத்தில் முன்னேற்றம் ஏற்பட்டது. எனவே, கடந்த ஆறு ஆண்டுகளில் மும்பை பங்குச் சந்தையின் குறியீட்டு எண் 'சென்செக்ஸ்' 199 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, முதலீட்டாளர்களுக்கு அதிக ஆதாயம் அளிப்பதில், இந்தோனேசியாவிற்கு (264.1 சதவீதம்) அடுத்தபடியாக உலக அளவில் இந்திய பங்கு வர்த்தகம் இரண்டாவது இடத்தில் உள்ளது.

இதுபோன்ற வளர்ச்சிகளை கண்டு வரும் நிலையில், உணவு பொருள்களுக்கான பணவீக்க விகிதம் உயர்ந்து வருவது மத்திய அரசுக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

எனவே, இதனை கட்டுப்படுத்தும் வகையில், மத்திய அரசு ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளை கையாள வேண்டும் என்றும் ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதால், மத்திய அரசு வழங்கிய ஊக்குவிப்பு சலுகைகளை படிப்படியாக திரும்ப பெற வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

உணவு பொருள்கள்

உணவு பொருள்கள் விலை விண்ணை தொடும் அளவிற்கு உயர்ந்து வருவதால், நடுத்தர மக்கள் அவர்களின் வருமானத்தில் பெரும் பகுதியை உணவு பொருள்களுக்காக செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். இதனால்தான் பொருளாதார ஆய்வு அறிக்கையில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்தி

பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டு வரும் நிலையில், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் 18 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள, வேளாண் துறையின் உற்பத்தியில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்திய மக்கள் தொகையில் 56 சதவீதத்தினர் வேளாண் சார்ந்த தொழிலை நம்பி உள்ளனர். நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் வேளாண் உற்பத்தி 0.2 சதவீதம் சரிவடையும் என ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வேளாண் துறை உற்பத்தியில் 4 சதவீத வளர்ச்சியை உருவாக்க வேண்டும் என்றும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த 2008–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், உலக பொருளாதாரத்தில் ஏற்பட்ட உருக்குலைவு இந்தியாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முந்தைய மூன்று நிதி ஆண்டுகளாக 9 சதவீதத்திற்கும் மேலாக வளர்ச்சி அடைந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி, சென்ற நிதி ஆண்டில் 7 சதவீதத்திற்கும் கீழ் சென்றது. இந்த பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில், மத்திய அரசு, சென்ற 2008–ஆம் ஆண்டு இறுதியிலிருந்து உற்பத்தி வரியை 14 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகவும், சேவை வரியை 12 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாகவும் குறைத்தது. அதாவது, ரூ.2.48 லட்சம் கோடி மதிப்பிற்கு சலுகை திட்டங்களை அளித்தது. பாரத ரிசர்வ் வங்கியும் பணப்புழக்கத்தை அதிகரிக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

தொழில்துறை உற்பத்தி

இதுபோன்ற காரணங்களால், சென்ற செப்டம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆறு காலாண்டுகளில் இல்லாத அளவிற்கு 7.2 சதவீதமாக உயர்ந்தது. சென்ற டிசம்பர் மாதத்தில் நாட்டின் தொழில் துறை உற்பத்தி கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 16.8 சதவீதமாக உயர்ந்துள்ளது. நடப்பு நிதி ஆண்டில், நாட்டின் கச்சா எண்ணெய் உற்பத்தி 11 சதவீதம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முகேஷ் அம்பானி தலைமையின் கீழ் செயல்படும் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனம், இயற்கை எரிவாயு உற்பத்தியில் முழுவீச்சில் களம் இறங்கியதையடுத்து, இயற்கை எரிவாயு உற்பத்தி 52.80 சதவீதம் அதிகரித்து 5,020 கோடி கனமீட்டராக உயர்ந்துள்ளது.

நிதிப் பற்றாக்குறை

மத்திய அரசு, அதிக செலவினங்களை மேற்கொண்டுள்ள நிலையில், வரி வருவாயும் குறைந்ததால், நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில், நிதி பற்றாக்குறை கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 6.8 சதவீதமாக உயர்ந்துள்ளது என சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டது. இது, 6.5 சதவீதமாக இருக்கும் என பொருளாதார ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி பற்றாக்குறை அதிகரித்துள்ளதும் மத்திய அரசுக்கு ஒரு பெரும் சவாலாக அமைந்துள்ளது. இந்நிலையில், பொருளாதாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டு வருவதால், மத்திய அரசு சலுகை திட்டங்களை படிப்படியாக திரும்ப பெற வேண்டும் என்று ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மானியம்

உணவு, உரங்கள், டீசல், மண்ணெண்ணெய் போன்றவற்றிற்கு மானியம் வழங்குவது மத்திய அரசுக்கு பெரும் சுமையாக உள்ளது. நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில், உணவுக்கான மானியம் ரூ.60,000 கோடியாகவும், உர மானியம் ரூ.70,000 கோடியாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி பற்றாக்குறையை கட்டுக்குள் வைத்திருக்க, மத்திய அரசு, உணவு, உரங்கள், டீசல் போன்றவற்றிற்கான விலையை சந்தை நிலவரப்படி நிர்ணயிக்கும் உரிமையை நிறுவனங்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஆலோசனையும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2008–ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து தொடர்ந்து 13 மாதங்களாக சரிவடைந்த நாட்டின் ஏற்றுமதியில், சென்ற 2009–ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து வளர்ச்சி ஏற்படத் தொடங்கி உள்ளது. இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டில் முதல் ஒன்பது மாதங்களில் நாட்டின் ஏற்றுமதி 20.3 சதவீதம் குறைந்துள்ளது. எனவே, ஏற்றுமதியில் ஈடுபட்டு வரும் நிறுவனங்களுக்கு சலுகைகள் வழங்க வேண்டும் என்றும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## சென்ற ஆண்டில் தேயிலை ஏற்றுமதி 6% சரிவு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொச்சி

சென்ற 2009–ஆம் ஆண்டில் நம் நாட்டிலிருந்து 19.14 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது, முந்தைய 2008–ஆம் ஆண்டில் 20.30 கோடி கிலோவாக இருந்தது. ஆக, சென்ற ஆண்டில் தேயிலை ஏற்றுமதி 6 சதவீதம் குறைந்துள்ளது. வட மாநிலங்கள் வாயிலான தேயிலை ஏற்றுமதி குறைந்து போனதே, ஒட்டுமொத்தத்தில் நாட்டின் தேயிலை ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாகும்.

தென் மாநிலங்கள்

சென்ற ஆண்டில், வட மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி சரிவடைந்துள்ள நிலையில், தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. ஈராக் மற்றும் பாகிஸ்தான் உள்ளிட்ட சில ஆசிய நாடுகள் தென் மாநிலங்களில் இருந்து தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்ததே இதற்கு காரணமாகும். கடந்த 2008–ஆம் ஆண்டில், வட மாநிலங்கள் 11.62 கோடி கிலோ தேயிலை ஏற்றுமதி செய்தன. இது, 2009–ஆம் ஆண்டில் 9.87 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. அதே சமயம், தென் மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதி 60 லட்சம் கிலோ அதிகரித்து 9.27 கோடி கிலோவாக உயர்ந்துள்ளது. உலக பொருளாதாரத்தின் மந்தநிலை காரணமாக, சென்ற ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் தென்னிந்தியாவின் தேயிலை ஏற்றுமதியும் சுமாராகவே இருந்தது. எனினும் ஜூன் மாதத்திற்கு பின்னர் ஏற்றுமதி விறுவிறுப்பு அடைந்ததாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்தனர்.

ஈராக்

2008–ஆம் ஆண்டு வரையிலான நான்கு ஆண்டுகளில், ஈராக் நாட்டின் தேயிலை இறக்குமதியில் தொடர் சரிவு நிலை காணப்பட்டது. இதற்கு ஈராக்கின் உள்நாட்டு பிரச்சினைகளே காரணமாகும். எனினும் சென்ற ஆண்டில் இந்நாட்டின் தேயிலை இறக்குமதி மீண்டும் அதிகரித்துள்ளது. இதனால் தென் மாநிலங்களின் ஏற்றுமதி சிறப்பான அளவில் வளர்ச்சி கண்டுள்ளது.

சி.ஐ.எஸ். நாடுகள் என்றழைக்கப்படும் காமன்வெல்த் நாடுகள்தான் வட இந்திய தேயிலையை அதிகம் வாங்குவது வழக்கம். சென்ற ஆண்டில் இந்த நாடுகள் தேயிலை இறக்குமதியை குறைத்துக் கொண்டதால் வட மாநிலங்களின் தேயிலை ஏற்றுமதியில் சரிவு ஏற்பட்டுள்ளது.

எகிப்து

பொதுவாக நம் நாட்டிலிருந்து தேயிலை இறக்குமதி செய்வதில் ஈரான், பாகிஸ்தான், ஐக்கிய அரபு குடியரசு நாடுகள், இங்கிலாந்து ஆகிய நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. 2008–ஆம் ஆண்டில் இந்திய தேயிலையை அதிக அளவில் இறக்குமதி செய்த எகிப்து நாடு, சென்ற ஆண்டில் இறக்குமதியை குறைத்துக் கொண்டது.

2009–ஆம் ஆண்டில் நாட்டின் தேயிலை உற்பத்தியும் சற்று குறைந்துள்ளது. 2008–ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது,

சென்ற ஆண்டில் தேயிலை உற்பத்தி 10 லட்சம் கிலோ குறைந்து 97.90 கோடி கிலோவாக சரிவடைந்துள்ளது. அதே சமயம் தேயிலை உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் கென்யா மற்றும் இலங்கையில் உற்பத்தி கணிசமாக குறைந்துள்ளது.

## அவரைக்காய் பயிரிடுவதில் தோட்டமூலா விவசாயிகள் ஆர்வம்

கூடலூர், பிப்.26–

கூடலூர் தோட்டமூலா பகுதி விவசாயிகள் அவரைக்காய் பயிரிடு வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வளம் மிகுந்த மண்

குன்னூர், ஊட்டி ஆகிய பகுதியில் மலைப்பிரதேச காய்கறிகள் மட்டுமே விளை விக்கப்படுகின்றன. கூடலூர் பகுதியில் மலை காய்கறிகள் மற்றும் சமவெளி பிரதேச காய்கறிகளும் சேர்த்து விளைவிக்கப்படுகின்றன. இதனால் பாகற்காய், மிள காய், புடலங்காய், பீர்க்கங்காய், அவரைக்காய் என பலவகை காய்கறிகள் கூடலூர் பகுதியில் ஏக்கர் கணக்கில் பயிரிடப் பட்டுள்ளன. குறிப்பாக மண் வளம் மிகுந்து இருப்பதால் காய்கறிகள் விளைச்சல் அதிகளவு உள்ளன.

பயிரிடுவதில் ஆர்வம்

கூடலூர் தோட்டமூலா பகுதியில் உள்ள சிறுவிவசாயி கள் தற்போது அவரைக்காய் பயிர்கள் பயிரிட்டு அறுவடை செய்து வருகின்றனர். இதன் ஊடுபயிராக மிளகாய் செடி களை பயிரிட்டு உள்ளனர்.

தற்போது 1 கிலோ அவரைக்காய் மார்க்கெட்டில் ரூ.12 முதல் 14 வரைக்கு விலை போவதால் விவசாயிகள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற் படுத்தி உள்ளன. கூடலூர் தோட்டமூலா, ஏழுமரம் ஆகிய பகுதிகளில் அவரைக் காய் கொடிகள் ஏராளமாக கட்டப்பட்டுள்ளன. அவரை காய் அறுவடை காலமாக உள்ளதால் விளைச்சல் அமோ கமாக உள்ளது. இதுகுறித்து அந்த பகுதி விவசாயிகள் கூறும்போது, அவரைக்காய் கள் விளைச்சல் பரவலாக உள் ளது. இங்கு இருந்து அண்டை மாநிலமான கேரளாவுக்கு அதிகளவு கொண்டு செல்லப் படுவதாக தெரிவித்தனர்.